ஏழாம் வகுப்பு
அறிவியல் (முதல் பருவம்)
அனைத்துப் பாடங்கள் ஒரு மதிப்பெண் வினா விடை **(Line By Line)**

## அளவீட்டியல்

1. நீளத்தின் SI அலகு யாது?
   மீட்டர் (மீ) (m)
2. நிறையின் SI அலகு யாது?
   கிலோ.கிராம் (கி.கி) (kg)
3. நேரத்தின் (காலத்தின்) SI அலகு யாது?
   வினாடி (வி) (s)
4. வெப்பநிலையின் SI அலகு யாது?
   கெல்வின் (k)
5. மின்னோட்டத்தின் SI அலகு யாது?
   ஆம்பியர் (A)
5. பொருளின் அளவின் SI அலகு யாது?
   மோல் (mol)
6. ஒளிச்செறிவின் SI அலகு யாது?
   கேண்டிலா (cd)
7. அடிப்படை அளவுகளை பெருக்கியோ அல்லது வகுத்தோ பெறப்படும் அளவுகளின் பெயர் என்ன?
   வழி அளவுகள்
8. பரப்பளவு மற்றும் கனஅளவு என்பவை -----?
   வழி அளவுகள்
9. பரப்பளவு காணஉதவும் வாய்ப்பாடு யாது?
   (நீளம் X அகலம்)
10. பரப்பளவின் அலகு என்ன?
    சதுர மீட்டர் (அல்லது) மீ $^{2}$
11. கனஅளவு காண உதவும் வாய்ப்பாடு
    (நீளம் X அகலம் X உயரம்)
12. கனஅளவு அலகு என்ன?
    கன மீட்டர் (அல்லது) மீ $^{3}$
13. வேகம் காண உதவும் வாய்ப்பாடு எது?
    (துாரம்/காலம்)
14. துாரத்தின் அலகு என்ன?
    (மீ / வி அல்லது மீவி $^{-1}$)
15. மின்னுாட்டம் காண உதவும் வாய்ப்பாடு எது?
    மின்னோட்டம் X நேரம்
16. மின்னுாட்டத்தின் அலகு யாது?
    ஆம்பியர்.வி (அல்லது) கூலும்
17. அடர்த்தி காண உதவும் வாய்ப்பாடு என்ன?
    நிறை / கனஅளவு
18. அடர்த்தியின் அலகு யாது?
    கி.கி / மீ $^{3}$ அல்லது கி.கி.மீ $^{-3}$
19. பொருள் ஒன்றின் மேற்பரப்பின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்?
    பரப்பளவு

20. ஒரு மீட்டர் பக்க அளவு கொண்ட சதுரம் ஒன்றினுள் அடைப்படும் பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
    ஒரு சதுர மீட்டர்
21. சதுரத்தின் பரப்பளவு காண உதவும் வாய்ப்பாடு என்ன?
    பக்கம் / பக்கம் அல்லது ($a^2$)
22. செவ்வகத்தின் பரப்பளவு காண உதவும் வாய்ப்பாடு என்ன?
    நீளம் / அகலம் அல்லது l X b (lb)
23. வட்டத்தின் பரப்பளவு காண உதவும் வாய்ப்பாடு என்ன?
    π X r X r ($\pi r^2$)
24. முக்கோணத்தின் பரப்பளவு காண உதவும் வாய்ப்பாடு என்ன?
    ½ X அடிப்பக்கம் X உயரம் (1/2bh)
25. ஒழுங்கற்ற வடிவமுடைய பொருளின் பரப்பளவை -------- முறையில் காணலாம்
    (வரைபடத்தாள் அல்லது நீரின் இடப்பெயர்ச்சி முறை)
26. ஒரு முப்பரிமாண பொருள் வெளியில் அல்லது சூழிடத்தில் ஆக்கிரமித்துக் கொள்ளும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
    கன அளவு அல்லது பருமன்
27. கன அளவு காண உதவும் வாய்பாடு என்ன?
    அடிப்பரப்பு X உயரம்
28. கன அளவின் SI அலகு என்ன?
    கன மீட்டர் அல்லது $மீ^3$
29. கன சதுரத்தின் கனஅளவு (பருமன்) காண உதவும் வாய்ப்பாடு யாது?
    பக்கம் X பக்கம் X பக்கம் அல்லது a X a X a
30. கன செவ்வகத்தின் கனஅளவு காண உதவும் வாய்ப்பாடு யாது?
    நீளம் X அகலம் X உயரம் அல்லது l X b X h (lbh)
31. கோளத்தின் கனஅளவு காண உதவும் வாய்ப்பாடு யாது?
    $4/3 \times \pi \times r^3$ அல்லது $4/3\pi r^3$
32. உருளையின் கன அளவு காண உதவும் வாய்ப்பாடு யாது?
    $\pi \times r^2 \times h$ அல்லது ($\pi r^2 h$)
33. ஒரு லிட்டர் என்பது எத்தனை cc க்கு சமம்?
    1000 cc
34. 1 லிட்டர் என்பது எத்தனை மில்லி லிட்டர்?
    1000 மில்லி லிட்டர்
35. கேலன் என்பது எதன் பருமனைக் காண உதவும் அலகு?
    திரவங்களின் பருமன்
36. அவுன்ஸ் மற்றும் குவார்ட் என்பன எதன் பருமனைக் காண உதவும் அலகு?
    திரவங்களின் பருமன்
37. 1 கேலன் என்பது எத்தனை மி.லிக்கு சமம்?
    3785 மிலி
38. 1 அவுன்ஸ் என்பது எத்தனை மிலி க்கு சமம்?
    30 மி.லி
39. 1 குவார்ட் என்பது எத்தனை லிட்டருக்கு சமம்
    1 லிட்டர்
40. அடர்த்தி காண உதவும் வாய்பாடு யாது?
    நிறை / பருமன் அல்லது M/V
41. அடர்த்தியின் SI அலகு என்ன?
    கி.கி. / $மீ^3$
42. அடர்த்தியின் CGS அலகு யாது?
    கி / $செ.மீ^3$

43. விளக்கெண்ணையின் அடர்த்தி என்ன?
    961 கி.கி. / மீ $^{3}$
44. காற்றின் அடர்த்தி என்ன?
    12 கி.கி. / மீ $^{3}$
45. மண்ணெண்ணெய் அடர்த்தி என்ன?
    800 கி.கி. / மீ $^{3}$
46. நீரின் அடர்த்தி என்ன?
    1000 கி.கி. / மீ $^{3}$
47. பாதரசம் அடர்த்தி என்ன?
    13600 கி.கி. / மீ $^{3}$
48. மரத்தின் அடர்த்தி என்ன?
    770 கி.கி. / மீ $^{3}$
49. அலுமினியம் உலோகத்தின் அடர்த்தி என்ன?
    2700 கி.கி. / மீ $^{3}$
50. இரும்பு உலோகத்தின் அடர்த்தி என்ன?
    7800 கி.கி. / மீ $^{3}$
51. தாமிரம் உலோகத்தின் அடர்த்தி என்ன?
    8900 கி.கி. / மீ $^{3}$
52. வெள்ளி உலோகத்தின் அடர்த்தி என்ன?
    10500 கி.கி. / மீ $^{3}$
53. தங்கம் உலோகத்தின் அடர்த்தி என்ன?
    19300 கி.கி. / மீ $^{3}$
54. நிறை காண உதவும் வாய்ப்பாடு யாது?
    அடர்த்தி X கன அளவு
55. கன அளவு காண உதவும் வாய்ப்பாடு யாது?
    நிறை X அடர்த்தி
56. இரு விண்மீன்களுக்கு இடையே உள்ள தொலைவை அளக்க பயன்படும் அலகு யாது?
    ஒளி ஆண்டு
57. பூமிக்கும் விண்மீனுக்கும் இடையேயுள்ள தொலைவை அளக்க பயன்படும் அலகு யாது?
    வானியல் ஆண்டு அல்லது ஒளி ஆண்டு
58. பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயான சராசரி தொலைவு என்ன?
    149.6 மில்லியன் கிலோ மீட்டர்
59. சூரியனில் இருந்து நெப்டியூன் எத்தனை வானியல் அலகு தொலைவில் உள்ளது?
    30 வானியல் அலகு
60. ஒரு வானியல் அலகின் மதிப்பு என்ன?
    149.6 மில்லியன் கிலோ மீட்டர் அல்லது 149.6 $X 10^{6}$ கி.மீ
61. சூரிய குடும்பத்திற்கு மிக அருகில் உள்ள விண்மீன் எது?
    பிராக்சிமா சென்டாரி
62. ஒளியின் வேகம் என்ன?
    $3 X 10^{8}$ மீ / வி
63. ஒரு ஆண்டில் உள்ள மொத்த விநாடிகளின் எண்ணிக்கை என்ன?
    $3.153 X 10^{7}$ விநாடிகள்
64. ஒளி ஒரு ஆண்டில் கடக்கும் தொலைவு என்ன?
    $9.46 X 10^{15}$ மீ
65. ஒரு ஒளி ஆண்டின் மதிப்பு என்ன?
    $9.46 X 10^{15}$ மீ

66. ப்ராக்சிமா சென்டாரி நமது சூரிய குடும்பத்தில் இருந்து எத்தனை ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது?
    4.22 ஒளி ஆண்டு
67. அண்டத்தின் மையத்தில் இருந்து பூமி எத்தனை ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது?
    25000 ஒளி ஆண்டு
68. நீரில் விளக்கெண்ணை மிதப்பதற்கு காரணம் என்ன?
    நீரின் அடர்த்தி அதிகம்

## விசையும் இயக்கமும்

69. ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஒரு பொருள் கடந்து வந்த பாதையின் மொத்த நீளம் எவ்வாறு அழைக்கப்படும்?
    தொலைவு
70. ஒரு பொருளின் இயக்கத்தின் போது அதன் துவக்க நிலைக்கும் இறுதி நிலைக்கும் இடையே உள்ள மிகக்குறைந்த நேர்க்கோட்டுத் தொலைவு எவ்வாறு அழைக்கப்படும்?
    இடப்பெயர்ச்சி
71. தொலைவு மற்றும் இடப்பெயர்ச்சி இவற்றின் SI அலகு என்ன?
    மீட்டர்
72. வான் போக்குவரத்துகளில் தொலைவினை அளக்க பயன்படுத்தப்படும் அலகு யாது?
    நாட்டிக்கல் மைல்
73. கடல் வழி போக்குவரத்துகளில் தொலைவினை அளக்க பயன்படுத்தப்படும் அலகு யாது?
    நாட்டிக்கல் மைல்
74. ஒரு நாட்டிக்கல் மைல் என்பது எத்தனை கிலோ மீட்டருக்கு சமம்?
    1.852 கி.மீ
75. கப்பல் மற்றும் விமானங்களின் வேகங்களை அளக்கப் பயன்படும் அலகு யாது?
    நாட்
76. தொலைவு மாறுபடும் வீதம் எவ்வாறு அழைக்கப்படும்?
    வேகம்
77. வேகம் காண உதவும் வாய்ப்பாடு யாது?
    தொலைவு / காலம்
78. வேகத்தின் அலகு யாது?
    மீட்டர் / விநாடி (மீ/வி)
79. ஒரு பொருள் சமகால இடைவெளிகளில் சம தொலைவினைக் கடந்தால் அப்பொருள் எந்த வேகத்தில் இருக்கிறது?
    சீரான வேகம்
80. ஒரு பொருள் வெவ்வேறு கால இடைவெளிகளில் வெவ்வேறு தொலைவினைக் கடந்தால் அப்பொருள் எந்த வேகத்தில் இருக்கிறது?
    சீரற்ற வேகம்
81. சராசரி வேகம் காண உதவும் வாய்ப்பாடு யாது?
    கடந்த மொத்தத் தொலைவு / எடுத்துக் கொண்ட மொத்த நேரம்
82. இடப்பெயர்ச்சி மாறுபடும் வீதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    திசைவேகம்
83. திசைவேகம் காண உதவும் வாய்ப்பாடு யாது?
    திசைவேகம் (v) = இடப்பெயர்ச்சி / காலம்
84. திசைவேகத்தின் SI அலகு யாது?
    மீட்டர் / விநாடி (மீ/வி)

85. ஒரு பொருள் தன் இயக்கத்தின் போது தனது திசையினை மாற்றாமல் சீரான கால இடைவெளியில் சீரான இடப்பெயர்ச்சியினை மேற்கொண்டால் அப்பொருள் எந்த திசைவேகத்தில் இருக்கிறது?
    சீரான திசைவேகம்
86. ஒரு பொருள் தனது திசையையோ அல்லது வேகத்தினையோ மாற்றிக்கொண்டால் அப்பொருள் எந்த திசைவேகத்தில் இருக்கிறது?
    சீரற்ற திசைவேகம்
87. வெற்றிடத்தில் பயணம் செய்யும் ஒளி எந்த வகை திசைவேகத்தைச் சார்ந்தது?
    சீரான திசைவேகம்
88. இரயில் நிலையத்திற்கு வரும் தொடர்வண்டியின் இயக்கம் எந்த வகை திசைவேகத்தைச் சார்ந்தது?
    சீரற்ற திசைவேகம்
89. சராசரி திசைவேகம் காண உதவும் வாய்ப்பாடு யாது?
    மொத்த இடப்பெயர்ச்சி / எடுத்துக்கொண்ட காலம்
90. திசைவேகம் மாறும் வீதம் எவ்வாறு அழைக்கப்படும்?
    முடுக்கம்
91. முடுக்கம் காண உதவும் வாய்ப்பாடு யாது?
    திசைவேக மாற்றம் / காலம்
92. முடுக்கத்தின் SI அலகு யாது?
    மீ / வி $^{2}$
93. சிறுத்தையின் வேகம் என்ன?
    25 மீ / வி முதல் 30 மீ / வி
94. ஒரு பொருளின் திசைவேகமானது காலத்தினைப் பொருத்து அதிகரித்துக் கொண்டே வந்தால் அப்பொருள் எவ்வகை முடுக்கத்தில் இருக்கிறது?
    நேர் முடுக்கம்
95. ஒரு பொருளின் திசைவேகமானது காலத்தினைப் பொருத்து குறைந்துக் கொண்டே வந்தால் அப்பொருளில் ஏற்படும் முடுக்கம் எவ்வகையைச் சார்ந்தது?
    எதிர்முடுக்கம்
96. எந்த புள்ளியில் ஒரு பொருளின் எடை முழுவதும் செயல்படுவது போல் தொன்றுகின்றதோ அப்புள்ளியே அப்பொருளின் ---------- எனப்படும்?
    ஈர்ப்ப மையம்
97. ஒழுங்கான வடிவம் கொண்ட பொருள்களின் ஈர்ப்பு மையமானது அப்பொருளின் ---------ல் அமைகிறது?
    வடிவியல் மையத்தில்
98. ஒரு பொருளின் ஆரம்பநிலையினைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனே அப்பொருளின் -------- எனப்படும்?
    சமநிலை
99. ஒரு பொருளின் சமநிலையை அதிகரிக்க அதன் ஈர்ப்பு மையம் எந்த துூரத்தில் அமைக்கப்பட வேண்டும்
    குறைந்த துூரத்தில்
100. தஞ்சாவூர் பொம்மை கீழே விழாமல் இருக்கக் காரணம் என்ன?
    பொம்மையின் ஈர்ப்பு மையம் மற்றும் அதன் மொத்த எடை பொம்மையின் அடிப்பகுதியில் உள்ளது
101. காற்றாடிகளின் அடிப்பரப்பு அகலமானதாக இருக்க காரணம் என்ன?
    சமநிலையை அதிகரிக்க
102. மேசை விளக்குகளின் அடிப்பரப்பு அகலமானதாக இருக்க காரணம் என்ன?
    சமநிலையை அதிகரிக்க

103. சொகுசுப் பேருந்துகளின் அடிப்புறம் பொருள்கள் வைப்பு அறை அமைக்கக் காரணம் என்ன?
பேருந்தின் ஈர்ப்பு மையம் உயரம் குறைக்க (சமநிலை அதிகரிக்கும்)
104. பந்தயக் கார்களின் உயரம் குறைவாகவும் அகலமானதாகவும் தயாரிக்க காரணம் என்ன?
சமநிலையை அதிகரிக்க
105. ஆமையின் வேகம் என்ன?
0.1 மீ / வி
106. விழும் மழைத்துளியின் வேகம் என்ன?
9 முதல் 10 மீ / வி
107. ஓடும் பூனையின் வேகம் என்ன?
14 மீ / வி
108. பயணிகள் விமானத்தின் வேகம் என்ன?
180 மீ / வி
109. ராக்கெட்டின் வேகம் என்ன?
5200 மீ / வி

## தனிமங்கள் சேர்மங்கள் மற்றும் கலவைகள்

110. பருப்பொருளின் அடிப்படை அலகு யாது?
அணு
111. பேரண்டத்தில் முதன்மையாக காணப்படும் அணு எது?
ஹைட்ரஜன்
112. ஒரு அணு மற்றொரு அணு அல்லது அணுக்களுடன் இணைந்து உருவாகும் கூட்டுப்பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
மூலக்கூறு
113. ஒன்றுக்கு மேற்பட்ட அணுக்களின் எந்த பிணைப்பினால் மூலக்கூறு உருவாகிறது?
வேதிப்பிணைப்பு
114. சேர்மத்தில் உள்ள தனிமங்களில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையை குறிப்பது எது?
வேதியியல் வாய்ப்பாடு
115. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தனிமங்களால் பிணைக்கப்பட்ட வேதிப்பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
சேர்மம்
116. வேதித் தனிமத்தின் அமைப்பைக் குறிக்கும் எளியக் குறியீடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
வேதிக்குறியீடு
117. மந்த வாயுக்கள் எத்தனை அணுக்களைக் கொண்ட மூலக்கூறுகள் ஆகும்?
ஓரணு மூலக்கூறு
118. ஈரணு மூலக்கூறுகளுக்கு உதாரணம் யாது?
ஆக்சிஜன், நைட்ரிக் ஆக்சைடு
119. மூவணு மூலக்கூறுகளுக்கு உதாரணம் யாது?
ஓசோன், சல்பர் டை ஆக்சைடு, கார்பன் டை ஆக்சைடு
120. பலஅணு மூலக்கூறுகளுக்கு உதாரணம் யாது?
பாஸ்பரஸ், சல்பர்
121. சாதாரண உப்பு எந்த தனிமங்களைக் கொண்டுள்ளது?
சோடியம் மற்றும் குளோரின்
122. நீரில் உள்ள தனிமங்கள் எவை?
ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன்

123. வெடிப்பொருள்கள் தயாரிக்கப் பயன்படும் தனிமங்கள் எவை?
 மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ்
124. விவசாயத்தில் உரங்கள் தயாரிக்கப் பயன்படும் தனிமம் எது?
 சல்பர்
125. அலைபேசித் தயாரிப்பில் பயன்படும் தனிமம் எது?
 காலியம்
126. கணினி சிப்புகள் தயாரிப்பில் பயன்படும் தனிமம் எது?
 சிலிக்கன்
127. இது வரை கண்டறியப்பட்ட மொத்தத் தனிமங்கள் எத்தனை?
 118
128. இயற்கையில் கிடைக்கும் தனிமங்களின் எண்ணிக்கை என்ன?
 94
129. ஆய்வகங்களில் செயற்கையாக தயாரிக்கப்படும் தனிமங்களின் எண்ணிக்கை என்ன?
 24
130. வயிற்றுப் போக்கு மருந்து தயாரிப்பில் பயன்படும் தனிமம் எது?
 பிஸ்மத்
131. தனிமம் என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?
 இராபர்ட் பாயில்
132. அறை வெப்பநிலையில் திரவமாக காணப்படும் உலோகம் எது?
 பாதரசம்
133. உலோகங்களில் மென்யானது எது?
 சோடியம்
134. அலோகங்களில் கடினமானது எது?
 வைரம்
135. அறை வெப்பநிலையில் திரவ நிலையில் உள்ள அலோகம் எது?
 புரோமின்
136. மின்சாரத்தைக் கடத்தும் அலோகம் எது?
 கிராபைட் (கார்பனின் புறவேற்றுமை வடிவம்)
137. உலோகங்கள் மற்றும் அலோகங்களின் பண்புகளை வெளிப்படுத்தும் தனிமங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 உலோகப்போலி
138. உலோகப்போலிக்கு உதாரணம் ---- ----- ----- மற்றும் -----?
 சிலிக்கன், ஆர்சனிக், ஆன்டிமணி மற்றும் போரான்
139. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமங்களின் அணுக்கள் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வேதி பிணைப்பின் மூலம் இணைந்து கிடைக்கும் தூயப்பொருள் எவ்வாறு அழைக்கப்படும்?
 சேர்மம்
140. சோடியம் கார்பனேட்டில் உள்ள தனிமங்கள் எவை?
 சோடியம், கார்பன், ஆக்சிஜன்
141. சமையல் சோடாவில் (சோடியம் பை கார்பனேட்) அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
 சோடியம், ஹைட்ரஜன், கார்பன், ஆக்சிஜன்
142. வெள்ளைச் சர்க்கரையில் (சீனி) அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
 கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன்
143. கால்சியம் ஆக்சைடில் அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
 கால்சியம் மற்றும் ஆக்சிஜன்
144. கால்சியம் ஹைட்ராக்சைடில் அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
 கால்சியம், ஆக்சிஜன், ஹைட்ரஜன்
145. சோடியம் ஹைட்ராக்சைடில் அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
 சோடியம், ஆக்சிஜன், ஹைட்ரஜன்

146. பொட்டாசியம் ஹைட்ராக்சைடில் அடங்கியுள்ள தனிமங்கள் எவை?
  பொட்டாசியம், ஆக்சிஜன், ஹைட்ரஜன்
147. வேதிக்குறியீடுகளை தகுந்த முறையில் பயன்படுத்திய முதல் அறிஞர் யார்?
  டால்டன்
148. தனிமங்களுக்கான பெயர்களை அங்கீகரிக்கும் அமைப்பு எது?
  IUPAC
149. ஹைட்ரஜன் தனிமத்தின் குறியீடு எது?
  H
150. ∴புளூரின் தனிமத்தின் குறியீடு எது?
  F
151. ஆக்சிஜன் தனிமத்தின் குறியீடு எது?
  O
152. கார்பன் தனிமத்தின் குறியீடு எது?
  C
153. பாஸ்பரஸ் தனிமத்தின் குறியீடு எது?
  P
154. சல்பர் தனிமத்தின் குறியீடு எது?
  S
155. பொட்டாசியம் தனிமத்தின் குறியீடு எது?
  K
156. யுரேனியம் தனிமத்தின் குறியீடு எது?
  U
157. அலுமினியம் தனிமத்தின் குறியீடு எது?
  Al
158. ஆர்கான் தனிமத்தின் குறியீடு எது?
  Ar
159. ஆர்சனிக் தனிமத்தின் குறியீடு எது?
  As
160. பேரியம் தனிமத்தின் குறியீடு எது?
  Ba
161. நிக்கல் தனிமத்தின் குறியீடு எது?
  Ni
162. புரோமின் தனிமத்தின் குறியீடு எது?
  Br
163. குரோமியம் தனிமத்தின் குறியீடு எது?
  Cr
164. கோபால்ட் தனிமத்தின் குறியீடு எது?
  Co
165. ஹீலியம் தனிமத்தின் குறியீடு எது?
  He
166. மெக்னீசியம் தனிமத்தின் குறியீடு எது?
  Mg
167. கால்சியம் தனிமத்தின் குறியீடு எது?
  Ca
168. குளோரின் தனிமத்தின் குறியீடு எது?
  Cl

169. சோடியம் குளோரைடின் மூலக்கூறு வாய்ப்பாடு எது?
    NaCl
170. நீரின் மூலக்கூறு வாய்பாடு எது?
    $H_2O$
171. குளுக்கோஸ் மூலக்கூறு வாய்ப்பாடு எது?
    $C_6H_{12}O_6$
172. எத்தனால் மூலக்கூறு வாய்பாடு எது?
    $C_2H_5OH$ ($C_2H_6O$)
173. அம்மோனியா மூலக்கூறு வாய்ப்பாடு எது?
    $NH_3$
174. கந்தக அமிலம் மூலக்கூறு வாய்பாடு எது?
    $H_2SO_4$
175. மீத்தேன் மூலக்கூறு வாய்பாடு எது?
    $CH_4$
176. சுக்ரோஸ் மூலக்கூறு வாய்பாடு எது?
    $C_{12}H_{22}O_{11}$
177. ஒரு தனிமத்தில் அல்லது சேர்மத்தில் அல்லது பொருளில் அடங்கியுள்ள ஒட்டு மொத்த அணுக்களின் எண்ணிக்கையை குறிக்கும் சொல்லின் பெயர் என்ன?
    அணுக்கட்டு எண்
178. பாஸ்பரஸ் மூலக்கூறின் அணுக்கட்டு எண் என்ன?
    4 ($P_4$)
179. சல்பர் மூலக்கூறின் அணுக்கட்டு எண் என்ன?
    8 ($S_8$)
180. கந்தக அமிலத்தின் ($H_2SO_4$) அணுக்கட்டு எண் என்ன?
    2+1+4 = 7
181. நீரின் ($H_2O$) அணுக்கட்டு எண் என்ன?
    2+1 = 3
183. ஒரு திண்மப் பொருளை சூடுபடுத்தும் போது என்ன நடக்கும்?
    துகள்கள் அதிர்வுறும் - பருமன் அதிகரிக்கும்
184. ஒரு பருப்பொருளை வெப்பப்படுத்தும் போது எதில் மாற்றம் ஏற்படுவது இல்லை?
    நிறை (துகள்களின் எண்ணிக்கை மாறாது)
185. திண்மம் திரவமாக மாறும் நிலையின் பெயர் என்ன?
    உருகுதல்
186. திரவம் வாயுவாக மாறும் நிலையின் பெயர் என்ன?
    ஆவியாதல்

## அணு அமைப்பு

187. அணுவின் சராசரி விட்டம் என்ன?
    $1 \times 10^{-9}$ மீ அல்லது 0.0000000001 மீ
188. இரத்த சிவப்பணுவின் விட்டம் என்ன?
    $1 \times 10^{-4}$
189. வைரஸ் விட்டம் என்ன?
    $1 \times 10^{-6}$ மீ
190. தூசி துகளின் விட்டம் என்ன?
    $1 \times 10^{-7}$ மீ
191. மிகச்சிறிய நீளங்களை அளக்க உதவும் அலகு எது?
    நானோமீட்டர்

192. ஒரு நானோ மீட்டரின் அளவு என்ன?
$1 X 10^{-9}$ nm
193. J.J. தாம்சன் அணுவினை எந்த பழத்துடன் ஒப்பிட்டார்?
தர்பூசணி
194. எலெக்ட்ரான்களைக் கண்டுபிடித்தவர் யார்?
J.J. தாம்சன்
195. J.J. தாம்சன் எந்த ஆண்டு நோபல் பரிசு பெற்றார்?
1906
196. புரோட்டானைக் கண்டுபிடித்தவர் யார்?
என்னஸ்ட் ரூதர்போர்டு
197. போரின் அணுக்கொள்ளை எதை மையமாகக் கொண்டு அமைந்தது?
ஆற்றல் மட்டங்களை
198. ஒரு அணுவின் கருவினுள் அமைந்துள்ள நேர்மின்னோட்டம் பெற்றத் துகளின் பெயர் என்ன?
புரோட்டான்
199. அணுக்கருவினுள் அமைந்துள்ள மின்சுமை அற்ற துகள் எது?
நியூட்ரான்கள்
200. எந்த தனிமத்தின் அணுக்கரு நியூட்ரான்களை பெற்றிருக்கவில்லை?
ஹைட்ரஜன்
201. நமது உடலில் ஏறத்தாழ எத்தனை செல்கள் காணப்படுகினறன?
ஏழு பில்லியன்
202. ஒரு அணுவின் அணுகருவினைச் சுற்றியுள்ள வட்டப்பாதையில் சுற்றிவரும் துகளின் பெயர் என்ன?
எலெக்ட்ரான்
203. ஒரு அணுவின் நிறை எந்த துகள்களின் நிறையை மட்டும் சார்ந்து இருக்கும்?
புரோட்டான் மற்றும் நியூட்ரான்கள்
204. அணுக்கருவினுள் காணப்படும் துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
நியூளியான்கள்
205. ஒரு அணு எந்த வகை மின்தன்மைக் கொண்டது?
நடுநிலைத்தன்மை
206. நியூட்ரானைக் கண்டுபிடித்தவர் யார்?
ஜேம்ஸ் சாட்விக்
207. புரோட்டானின் நிறை என்ன?
$1.6726 X 10^{-27}$
208. எலெக்ட்ரானின் நிறை என்ன?
$9.1093 X 10^{-31}$
209. நியூட்ரானின் நிறை என்ன?
$1.6749 X 10^{-27}$
210. ஒரு அணுவில் காணப்படும் எலக்ட்ரான்கள் அல்லது புரோட்டான்களின் மொத்த எண்ணிக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அணு எண்
211. அணு எண் எந்த ஆங்கில எழுத்தால் குறிக்கப்படுகிறது?
Z
212. ஒரு அணுவில் உள்ள அணுக்கருவினுள் உள்ள மொத்த புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் எண்ணிக்கையின் கூடுதல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
நிறை எண்
213. ஹைட்ரஜன் தனிமத்தின் அணு எண் என்ன?
1 (நிறை எண் 1)

214. ஹீலியம் தனிமத்தின் அணு எண் என்ன?
2 (நிறை எண் 4)
215. அலுமினியம் தனிமத்தின் அணு எண் என்ன?
13 (நிறை எண் 27)
216. ஆக்சிஜன் தனிமத்தின் அணு எண் என்ன?
8 (நிறை எண் 16)
217. சோடியம் தனிமத்தின் அணு எண் என்ன?
11 (நிறை எண் 23)
218. வாழைப்பழத்தில் உள்ள தனிமத்தின் பெயர் என்ன?
பொட்டாசியம்
219. ஒரே அணு எண்ணையும் வெவ்வேறு நிறை எண்ணையும் பெற்றுள்ள ஒரே தனிமத்தின் அணுக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
ஐசோடோப்புகள்
220. கீழ்கண்டவற்றுள் எது டியூட்ரியம் ஐசோடோப்பு?
$_1H^2$
221. கீழ்கண்டவற்றுள் எது டிரிட்டியம் ஐசோடோப்பு ?
$_1H^3$
222. ஒரே நிறை எண்ணையும் வெவ்வேறு அணு எண்களையும் கொண்ட அணுக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
ஐசோபார்கள்
223. ஓர் அணு பிற அணுவுடன் இணையக்கூடிய திறன் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
இணைதிறன்
224. $H_2O$ வில் ஆக்சிஜனின் இணைதிறன் என்ன?
2
225. ஹைட்ரோகுளோரிக் அமிலத்தில் (HCl) குளோரின் இணைதிறன் என்ன?
1
226. மீத்தேன் ($CH_4$) சேர்மத்தில் கார்பன் இணைதிறன் என்ன?
4
227. அம்மோனியா ($NH_3$) மூலக்கூறில் நைட்ரஜன் இணைதிறன் என்ன?
3
228. கீழ்கண்டவற்றுள் ஒரு இணைதிறன் கொண்ட தனிமம் எது?
ஹைட்ரஜன் மற்றும் சோடியம்
229. கீழ்கண்டவற்றுள் இரு இணைதிறன் கொண்ட தனிமம் எது?
ஆக்சிஜன் மற்றும் பெரிலியம்
230. கீழ்கண்டவற்றுள் மூன்று இணைதிறன் கொண்ட தனிமம் எது?
நைட்ரஜன் மற்றும் அலுமினியம்
231. $MgCl_2$ சேர்மத்தில் மெக்னீசியத்தின் இணைதிறன் என்ன?
2
232. கால்சியம் இணைதிறன் என்ன?
2

## தாவரங்களின் இனப் பெருக்கம் மற்றும் மாற்றுருக்கள்

233. விதைகளின் மூலம் தாவரங்கள் உருவாகும் நிகழ்ச்சி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
பாலினப்பெருக்கம்
234. மொட்டினை பாதுகாக்கும் இலை போன்று பசுமை நிறமுடைய அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
புல்லி வட்டம்

235. பிரகாசமான வண்ணத்துடன் கவர்ச்சியாகவும் இனிய நறுமணத்தோடும் பூச்சிகளை கவர்ந்திழுக்கக் கூடிய அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 அல்லி வட்டம்
236. மலரின் ஆண் இனப்பெருக்க வட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 மகரந்தத்தாள் வட்டம்
237. மகரந்தப் பையில் உள்ள தூள் போன்ற பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 மகரந்தத் தூள்கள்
238. தாவரத்தின் இனப்பெருக்க உறுப்பு எது?
 மலர்
239. மலரின் பெண் இனப்பெருக்க உறுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 சூலகம்
240. தாவரத்தில் விதையாக உருவாகும் பகுதி எது?
 சூல்
241. தாவரத்தில் சூற்பைக்கு மேலே காணப்படும் மெல்லிய குழல்போன்ற பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 சூலகத்தண்டு
242. தாவரத்தில் மகரந்தத்துள்களைப் பெற்றுக்கொள்ளும் பகுதி எது?
 சூலகமுடி
243. ஒரு மலரில் புல்லி அல்லி மகரந்தத்தாள் மற்றும் சூலகம் நான்கும் காணப்பட்டால் அம்மலர் எவ்வாறு அழைக்கப்படும்?
 முழுமையான மலர்
244. சூலகவட்டம் இருந்து மகரந்தத்தாள் இல்லாமல் உள்ள மலர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 பெண்மலர்
245. மகரந்த்தாள்களைப் பெற்று சூலக வட்டத்தை பெறாத மலர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 ஆண்மலர்
246. பல மலர்கள் ஒன்றாக இணைந்துக் காணப்பட்டால் அது எவ்வாறு அழைக்கப்படும்?
 மஞ்சரி
247. வெட்டுக்காயப் பூண்டின் தாவரவியல் பெயர் என்ன?
 ட்ரைடாக்ஸ் புரோகும்பன்ஸ்
248. வெட்டுக்காயப்பூண்டின் இலைச்சாறு எதைக் குணப்படுத்த உதவுகிறது?
 வெட்டுக்காயங்கள்
249. ஒரு மலரில் மகரந்தத்துள் சூலக முடியை அடையும் நிகழ்ச்சி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 மகரந்தச்சேர்க்கை
250. ஒரு மலரின் மகரந்தப்பையில் உள்ள மகரந்ததுள்கள் அதே மலரின் சூலகமுடியையோ அல்லது மற்றொரு மலரின் சூலகமுடியையோ அடைவதன் பெயர் என்ன?
 தன் மகரந்தச் சேர்க்கை
251. ஒரு தாவரத்தின் மகரந்தப்பையில் உள்ள மகரந்தத்துள்கள் அதே இனத்தைச் சார்ந்த மற்றொரு தாவரத்தின் சூலகமுடியை அடையும் நிகழ்ச்சியின் பெயர் என்ன?
 அயல் மகரந்தச்சேர்க்கை
252. அவரை தாவரம் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தது?
 ஃபேபேஸி
253. தக்காளி தாவரம் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தது?
 சொலொனேஸி
254. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் காரணிகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
 மகரந்தச் சேர்க்கையாளர்கள்
255. அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் தாவரங்கள் எவை?
 ஆப்பிள் ஃபிளம்ஸ் ஸ்ட்ரா பெர்ரி பூசணி
256. பூவில் ஆண் கேமிட்டுகள் எடுத்து செல்லும் அமைப்பின் பெயர் என்ன?
 மகரந்தக்குழல்

257. பூவில் ஆண் கேமீட் மற்றும் பெண் கேமீட் இணையும் நிகழ்ச்சியின் பெயர் என்ன?
கருவுறுதல்
258. மலரில் பெண் கேமீட் (அண்டம்) அமைந்துள்ள இடம் எது?
சூல்
259. கருவுறுதலுக்குப் பின்பும் புல்லி இதழ் கனியில் இருந்து உதிராமல் இருக்கும் தாவரம் எது?
கத்தரிக்காய் மற்றும் வெண்டைக்காய்
260. சீத்தாப்பழம் எவ்வகை கனிக்கு உதாரணம்?
திரள் கனி
261. உலகின் பெரிய மற்றும் அதிக எடையுள்ள விதை எது?
தேங்காய்
262. தாவர உலகின் மிகச்சிறிய விதையை உருவாக்கும் தாவரம் எது?
ஆர்க்கிட் விதை
263. உருளைக்கிழங்கு தாவரத்தில் புதுத்தாவரங்கள் எந்த பகுதியில் இருந்து உருவாகின்றது?
கணு மற்றும் மொட்டு
264. கரும்பு மற்றும் சேனைக்கிழங்கு தாவரங்களில் புதுத்தாவரங்கள் எந்த பகுதியில் இருந்து உருவாகின்றது?
தண்டு
265. ஈஸ்ட் எம்முறையில் புதிய ஈஸ்ட் செல்லை உருவாக்கும்?
மொட்டு விடுதல்
266. ஸ்பைரோகைரா பாசி எந்த வடிவம் உடையது?
இழை வடிவம்
267. ஸ்பைரோகைரா எம்முறையில் இளம் பாசிகளை உருவாக்கும்?
துண்டாதல்
268. ஸ்போர்களை உருவாக்கும் தாவரங்கள் எவை?
பாசிகள் பிரையோபைட் மற்றும் டெரிடோபைட்
269. பீட்ரூட் தாவரம் எவ்வகை வேர் கொண்ட தாவரம்?
சேமிப்பு வேர்
270. துணைவேர் அல்லது தூண்வேர் கொண்ட தாவரம் எது?
ஆலமரம்
271. வாயு பரிமாற்றம் செய்யும் வேர்களைக் கொண்ட தாவரம் எது?
அவிசினியா
272. உறிஞ்சு வேர்களைக் கொண்ட தாவரம் எது?
கஸ்குட்டா
273. தரைமேல் தண்டின் மாற்றுருக்கள் கொண்ட தாவரம் எது?
கள்ளி
274. தரையொட்டிய தண்டின் மாற்றுருக்கள் கொண்ட தாவரம் எது?
வெங்காயத்தாமரை
275. தரைக்கீழ்த்தண்டு மாற்றுருக்கள் கொண்ட தாவரம் எது?
சேப்பங்கிழங்கு
276. இலைகள் முட்களாக மாறியுள்ள தாவரம் எது?
சப்பாத்திக்கள்ளி
277. இலைகள் பற்றுக்கம்பிகளாக மாறியுள்ள தாவரம் எது?
பட்டாணி
278. கொல்லிகள் (பூச்சியுண்ணும் தாவரம்) வகைத் தாவரத்திற்கு உதாரணம் எது?
நெப்பந்தஸ்
279. கதிர் வடிவ வேர் கொண்ட தாவரம் எது?
முள்ளங்கி
280. பம்பர வடிவ வேர் கொண்டத் தாவரம் எது?
டர்னிப் மற்றும் பீட்ரூட்

281. கூம்பு வடிவ வேர் கொண்ட தாவரம் எது?
கேரட்
282. தூண் வேர்கள் கொண்ட தாவரம் எது?
ஆலமரம்
283. முட்டு வேர்கள் கொண்ட தாவரம் எது?
கரும்பு மற்றும் மக்காச்சோளம்
284. பற்று வேர்கள் கொண்ட தாவரங்கள் எவை?
வெற்றிலை மற்றும் மிளகு (கணு மற்றும் கணுவிடைப் பகுதியில் தோன்றும்)
285. தாவரங்களில் வேர்கள் தண்டிலோ இலைகளிலோ காணப்பட்டால் அவ்வேர்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
மாற்றிட வேர்கள்
286. சுவாசிக்கும் வேர்கள் (நிமட்டோ:.போர்கள்) கொண்ட தாவரம் எது?
அவிசீனியா
287. தொற்றுத் தாவரமாக மரங்களில் வாழும் தாவரத்திற்கு உதாரணம்?
வாண்டா
288. வாண்டா தாவரத்தில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்ச உதவும் திசு எது?
வெலமன் திசு
289. ஹாஸ்டோரியா (உறிஞ்சு வேர்கள்) கொண்டத் தாவரம் எது?
கஸ்குட்டா (ஒட்டுண்ணித்தாவரம்)
290. இஞ்சி வெங்காயம் மற்றும் உருளை போன்றவை தாவரத்தின் எந்தப்பகுதி ஆகும்?
தண்டுப்பகுதி
291. இலைத் தொழில் தண்டு காணப்படும் தாவரம் எது?
கள்ளித் தாவரங்கள்
292. கள்ளி வகைத் தாவரங்களில் எந்தப் பகுதி ஒளிச்சேர்க்கையில் ஈடுபடுகிறது?
தண்டுப்பகுதி
293. கள்ளி வகைத் தாவரங்களில் இலைகள் முட்களாக மாறியுள்ளதன் பயன் என்ன?
நீராவிப் போக்கு குறையும்
294. தரை மேல் தண்டு மாற்றுரு வகைத் தாவரத்திற்கு உதாரணம் எது?
கள்ளி வகைத் தாவரம்
295. வல்லாரைத் தாவரத்தில் காணப்படும் தண்டு வகை எது?
ஓடு தண்டு (தரையொட்டியத் தண்டு)
296. ஸ்டோலன் வகை தண்டு காணப்படும் தாவரம் எது?
காட்டு ஸ்ட்ரா பெர்ரி (தரையொட்டியத் தண்டு)
297. தரைக்கீழ் ஓடு தண்டு கொண்ட தாவரம் எது?
கிரைசாந்திமம் (தரையொட்டியத் தண்டு)
298. குட்டையான ஓடு தண்டு கொண்ட தாவரம் எது?
வெங்காயத் தாமரை (தரையொட்டியத் தண்டு)
299. இஞ்சி மற்றும் மஞ்சள் தாவரங்களில் காணப்படும் தண்ட எந்த வகையைச் சார்ந்தது?
மட்டநிலத் தண்டு (தரைக்கீழ் தண்டு)
300. வட்ட வடிவில் தரைக்கீழ் தண்டு (கந்தம்) உடையத் தாவரம் எது?
சேனைக்கிழங்கு மற்றும் சேப்பங்கிழங்கு (தரைக்கீழ் தண்டு)
301. கோள வடிவில் (கிழங்கு) உணவைச் சேமிக்கும் தரைக்கீழ்த் தண்டு உடையத் தாவரம் எது?
உருளைக்கிழங்கு (தரைக்கீழ் தண்டு)
302. பூண்டு மற்றும் வெங்காயம் தாவரங்களில் உணவை சேமிக்கும் பகுதி எது?
இலை
303. குமிழம் வகை தரைக்கீழ் தண்டு கொண்ட தாவரம் எது?
பூண்டு மற்றும் வெங்காயம்
304. இலைகள் முட்களாக மாறியுள்ள தாவரம் எது?
கள்ளி தாவரங்கள்

305. பற்றுக் கம்பிகள் கொண்ட தாவரம் எது?
குளோரியோசா சூப்பர்பா (செங்காந்தள்)
306. செங்காந்தள் தாவரத்தில் எந்த பகுதி பற்றுக்கம்பியாக மாறியுள்ளது?
இலையின் நுனிப்பகுதி
307. நுனிச்சிற்றிலைகள் பற்றுக் கம்பிகளாக மாறியுள்ள தாவரம் எது?
பைசம் சட்டைவம் (பட்டாணி)
308. இலைக்காம்பு (பில்லோடு) ஒளிச்சேர்க்கை செய்யும் தாவரம் எது?
அகேஷியா ஆரிகுலிபார்மிஸ்
309. இலைகள் குடுவைகள் போன்று மாறியுள்ள தாவரம் எது?
நெப்பந்தஸ் (பூச்சியுண்ணும் தாவரம்)
310. நெப்பந்தஸ் தாவரம் பூச்சிகளிடமிருந்து எந்த ஊட்டச்சத்தைப் பெறுகின்றது?
நைட்ரஜன்

## உடல் நலமும் சுகாதாரமும்

311. டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசு எது?
ஏடிஸ் எஜிப்டி
312. டெங்கு காய்ச்சலை உருவாக்கும் வைரஸ் எது?
DEN-1,1 வைரஸ்
313. டெங்கு வைரசின் தீவிரமான செயல்பாடு என்ன?
இரத்தத் தட்டுகளின் எண்ணிக்கையை குறைக்கும்
314. உணவை அரைக்கும் செயலின் பெயர் என்ன?
மாஸ்டிகேசன்
315. பற்களில் உள்ள பாக்டீரியாக்களை நீக்கும் செயல்முறையின் பெயர் என்ன?
ஃப்ளோசிங் (பற் சிதைவைத் தடுக்க உதவும்)
316. இரவு குருட்டுத்தன்மை (மங்கிய ஒளியில் பார்க்க முடியாமை) காரணமான வைட்டமின் எது?
வைட்டமின் ஏ
317. இளம் சிவப்பு கண் நோய் (விழிவெண்படல அழற்சி) எந்த நுண்ணுயிரியால் ஏற்படுகிறது?
வைரஸ் மற்றும் பாக்டீரியா
318. வண்ணக்குருட்டுத் தன்மை எதன் காரணமாக வருகிறது?
மரபணு வழி
319. நோயைப் பரப்பும் காரணிகள் எவ்வாறு அழைக்கப்படும்?
வெக்டார்கள்
320. காசநோய் (டி.பி) நோய் எந்த பாக்டீரியாவால் உருவாகிறது?
மைக்கோபாக்டீரியம் டியூபர்குலே
321. காசநோயை தடுப்பதற்காக போடப்படும் தடுப்பூசி எது?
B.C.G
322. காலரா நோயை உருவாக்கும் பாக்டீரியாவின் பெயர் என்ன?
விப்ரியோ காலரே
323. டைபாய்டு நோயை உருவாக்கும் பாக்டீரியாவின் பெயர் என்ன?
சால்மோனெல்லா டைபி
324. ரேபீஸ், மஞ்சள் காமாலை மற்றும் சின்னம்மை போன்ற நோய்கள் எதன் மூலம் உருவாகின்றது?
வைரஸ்
325. ஹெபாடிட்டிஸ் என எந்த நோய் அழைக்கப்படுகிறது?
மஞ்சள் காமாலை
326. மஞ்சள் காமாலை நோயை உருவாக்கும் வைரஸ் பெயர் என்ன?
ஹெபாடிட்டிஸ் வைரஸ் A,B,C,D
327. அனோரெக்ஸியா என்பதன் பொருள் என்ன?
பசியின்மை

328. தட்டம்மை நோயை உருவாக்கும் வைரஸ் பெயர் என்ன?
வரிசெல்லா ஜோஸ்டர்
329. நீரைக்கண்டு பயப்படும் நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
ஹைட்ரோபோபியா
330. ரேபிஸ் நோயின் முக்கிய அறிகுறி என்ன?
ஹைட்ரோபோபியா
331. ரேபிஸ் எந்த விலங்குகள் கடிப்பதன் மூலம் பரவுகிறது?
நாய் முயல் குரங்கு பூனை
332. கீழ்கண்டவற்றுள் தடுப்பூசி எவை?
BCG போலியோ மற்றும் MMR
333. மெலனின் என்ற நிறமி உடலில் இழப்பு ஏற்படுவதால் தோன்றும் நோய் எது?
லுகோடெர்மா
334. இரத்த சோகை குறைபாடு எந்த ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படுகிறது?
இரும்பு
335. இரும்பு சல்பேட் மாத்திரைகள் எந்த குறைபாட்டை சரிசெய்ய அளிக்கப்படுகிறது?
இரத்தசோகை
336. உட்தோல் (டெர்மிஸ்) பாதிப்படையும் தீக்காயங்கள் எந்த நிலை காயங்கள்?
இரண்டாம் நிலை தீக்காயங்கள்
337. தோல் ஒட்டுதல் முறை சிகிச்சை யாருக்கு அளிக்கப்படுகிறது?
தீக்காயம் அடைந்தவர்களுக்கு
338. பெனிசிலின் மருந்து யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
அலெக்சாண்டர் பிளமிங்
339. மருந்துகளின் ராணி என அழைக்கப்படுவது எது?
பெனிசிலின்
340. பெனிசிலின் மருந்து எந்த பூஞ்சையில் இருந்து தயாரிக்கப்படுகிறது?
பெனிசிலியம் நொட்டேட்டம்

## கணினி காட்சித் தொடர்பு

341. கணினியில் இடம் பெற்றிருக்கும் செயலி மூலம் உருவாக்கப்படுமு் எந்த ஒரு வெளியீடும் எவ்வாறு அழைக்கப்படும்?
கோப்பு (File)
342. பல கோப்புகளை உள்ளடக்கிய பெட்டகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
கோப்புத் தொகுப்பு (Folder)
343. கோப்புகளை சேமித்து வைக்க பயன்படும் இடம் எது?
கோப்புப் பெட்டகம்
344. கணினிகளில் குறிப்புகளை சேகரித்து வைக்க பயன்படும் எது?
Notepad
345. கணினிகளில் படங்களை வரைய உதவும் செயலி எது?
Paint
346. படங்கள் வழியாக குறிப்பிட்ட கருத்தினை நமக்கு எளிதில் புரிய வைக்கும் சாதனங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறத?
காட்சித் தொடர்பு சாதனங்கள்
347. கணினியில் புகைப்படங்களை அழகுப்படுத்தவும் அதில் மாறுதல்களைச் செய்யவும் பயன்படும் மென்பொருள் எது?
போட்டோஷாப் (Photoshop)
348. படக்கதைகளை காணொளியாக மாற்ற உதவும் மென்பொருள் எது?
மைக்ரோசாப்ட் போட்டோ ஸ்டோரி

349. படங்கள் வரைவதற்கும் சின்னங்கள் உருவாக்கவும் பயன்படுபவை எது?
வெக்டர் வரைகலைப் படங்கள்

350. ராஸ்டர் வரைகலைப் படங்கள் எதை அடிப்படையாகக் கொண்டது?
படப்புள்ளிகளை

351. நிழற்படக் கருவி மூலம் எடுக்கப்படும் படங்கள் எவ்வகையைச் சார்ந்தது?
ராஸ்டர் வரைகலைப் படங்கள்

352. வருடி (ஸ்கேன்னர்) மூலம் பெறப்படும் படங்கள் எவ்வகையைச் சார்ந்தது?
ராஸ்டர் வரைகலைப் படங்கள்

353. எந்த வகைப் படங்கள் பெரிதாக்கிப் பார்க்கும் போது செவ்வக அடுக்குகளாகத் தெரியும்?
ராஸ்டர் வரைகலைப் படங்கள்

354. கீழ்கண்டவற்றுள் எது ராஸ்டர் கோப்பு வகையைச் சார்ந்தது?
அ. .png ஆ. .jpg or .jpeg இ. .gif ஈ. .tiff & .psd
**விடை: அனைத்தும்**

355. ராஸ்டர் வரைகலைப் படங்களை எடிட் செய்யும் மென்பொருள் எது?
அடோபி போட்டோஷாப் (Adobe photoshop)

356. கணிதத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் படங்கள் எந்த வகையைச் சார்ந்தவை?
வெக்டர் வரைகலைப் படங்கள்

357. கீழ்கண்டவற்றுள் எது வெக்டார் கோப்பின் வகையாகும்?
அ. .eps ஆ. .ai இ. .pdf ஈ. .svg & .sketch
**விடை: அனைத்தும்**

358. கீழ்கண்ட எந்த மென்பொருள் மூலம் வெக்டர் வரைகலைப் படங்களைத் திருத்த முடியாது?
அ. அடோபி இல்லுஸ்ட்ரேட்டர் ஆ. ஸ்கெட்ச் இ. இங்க்ஸ்கேப் **ஈ. அடோபி போட்டோஷாப்**

359. நாம் காகிதத்தில் வரைந்த படங்களை வெக்டர் படங்களாக மாற்ற பயன்படும் மென்பொருள் எது?
இன்ங்ஸ்கேப்

360. முப்பரிமாணப் படங்கள் கீழ்கண்டவற்றுள் எவற்றைக் கொண்டு இருக்கும்?
அ. நீளம் ஆ. அகலம் இ. உயரம் **ஈ. அனைத்தும்**

361. இருபரிமாணப் படங்கள் எதைக் கொண்டிருக்காது?
உயரம்

362. முப்பரிமாணத்தின் அடுத்தக் கட்டமாக வந்துள்ள தொழில்நுட்பம் எது?
மெய்நிகர் (VIRTUAL REALITY)

363. கணினியில் உருவாக்கப்படும் தோற்றங்களை உண்மையான உருவம் போல காட்ட உதவும் தொழில்நுட்பம் எது?
மெய்நிகர் (VIRTUAL REALITY)

364. போட்டோஷாப் மென்பொருளை அதிகம் பயன்படுத்துபவர்கள் யார்?
புகைப்படக் கலைஞர்கள்

365. மைக்ரோசாப்ட் போட்டோ ஸ்டோரியில் நமது படங்களை பதிவேற்ற பயன்படுத்தப்படும் தெரிவு எது?
Import Picture

ஏழாம் வகுப்பு
அறிவியல் (இரண்டாம் பருவம்)
அனைத்துப் பாடங்கள் ஒரு மதிப்பெண் வினா விடை **(Line By Line)**

## வெப்பம் மற்றும் வெப்பநிலை

1. ஒரு பொருளின் வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவீடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   வெப்பநிலை
2. ஒரு பொருளில் உள்ள துகள்களின் (மூலக்கூறு) சராசரி இயக்க ஆற்றலின் மதிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   வெப்பநிலை
3. வெப்பநிலையினை அளக்க உதவும் அலகுகள் எவை?
   செல்சியஸ் - பாரன்ஹீட் - கெல்வின்
4. செல்சியஸ் அலகு --------- எனவும் அழைக்கப்படும்?
   சென்டிகிரேடு
5. வெப்பநிலையின் SI அலகு எது?
   கெல்வின் (k)
6. ஒரு பொருள் அதிக வெப்பநிலையினைக் கொண்டிருந்தால் அதில் உள்ள மூலக்கூறுகளின் இயக்கம் எவ்வாறு இருக்கும்?
   அதிக வேகமாக இயங்கும்
7. திண்மப் பொருளுக்கு வெப்பம் அளிக்கும் போது என்ன மாற்றம் நடக்கும்?
   விரிவடையும்
8. வெப்பநிலையினை அளக்க உதவும் கருவி எது?
   வெப்பநிலைமானி
9. பாதரசம் ஏன் வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படுகிறது?
   சிறிய வெப்பநிலை மாற்றம் ஏற்பட்டால் கூட அதன் கனஅளவில் மாற்றம் ஏற்படும்
10. வெப்பநிலைமானியில் பாதரசம் பயன்படுத்தக் காரணம் என்ன?
    அ. சீராக விரிவடையும் ஆ. ஒளிஊடுருவாது
    இ. கண்ணாடி சுவரில் ஒட்டாது ஈ. வெப்பத்தினை நன்கு கடத்தும்
    உ. அதிக கொதிநிலைக் கொண்டது ஊ. குறைந்த உறைநிலைக் கொண்டது
11. பாதரசத்தின் கொதிநிலை என்ன?
    $357^0c$
12. பாதரசத்தின் உறைநிலை என்ன?
    $-39^0c$
13. மிகக்குறைந்த வெப்பநிலைகளை அளக்க எந்த திரவம் வெப்பநிலைமானியில் பயன்படுகிறது?
    ஆல்கஹால்
14. செல்சியஸ் அளவீட்டினை விட நுட்பமான அளவீடு எது?
    பாரன்ஹீட்
15. உடலின் வெப்பநிலையானது பெரும்பாலும் எந்த அளவீட்டில் அளக்கப்படுகிறது?
    பாரன்ஹீட்
16. மருத்துவ வெப்பநிலைமானிக் கொண்டு அளவிடக் கூடிய குறைந்த அளவீடு எது?
    $35^0c$ or $94^0F$
17. மருத்துவ வெப்பநிலைமானிக் கொண்டு அளவிடக் கூடிய அதிகபட்ச வெப்பநிலை என்ன?
    $42^0c$ or $108^0F$

18. மருத்துவ வெப்பநிலைமானிக் கொண்டு அளவிடும் முன்பு பாதரச மட்டம் எந்த அளவீட்டிற்கு கீழே இருக்க வேண்டும்?
    $35^0$c or $94^0$F
19. வெப்பநிலைமானியை எந்த பகுதியில் பிடிக்கக் கூடாது?
    குமிழ் பகுதியில்
20. தொழிற்சாலைகளில் எவ்வகை வெப்பநிலைமானி பயன்படுத்தப்படுகிறது?
    ஆய்வக வெப்பநிலைமானி
21. ஆய்வக வெப்பநிலைமானியில் எந்த பகுதிக் காணப்படாது?
    குறுகிய வளைவு
22. ஆய்வக வெப்பநிலைமானி எந்த அளவுகோலினைக் கொண்டுள்ளது?
    $-10^0$c முதல் $110^0$c
23. செல்சியஸ் அளவுகள் கொண்ட மருத்துவ வெப்பநிலைமானியில் அளவீடுகள் எவ்வாறு குறிக்கப்பட்டு இருக்கும்?
    $35^0$c முதல் $42^0$c வரை
24. பாரன்ஹீட் அளவுகள் கொண்ட மருத்துவ வெப்பநிலைமானியில் அளவீடுகள் எவ்வாறு குறிக்கப்பட்டு இருக்கும்?
    $94^0$F முதல் $108^0$F வரை
25. மருத்துவ வெப்பநிலைமானியில் உள்ள குறுகிய வளைவின் பயன் என்ன?
    பாதரச மட்டம் கீழ் இறங்காமல் பாதுகாக்கும்
26. எந்த வகை வெப்பநிலைமானியில் பாதரச மட்டத்தைக் கீழே கொண்டு வர உதற வேண்டிய அவசியம் இல்லை?
    ஆய்வக வெப்பநிலைமானி
27. மனிதர்களின் சராசரி உடல் வெப்பநிலை என்ன?
    37°C (98.6°F)
26. உடல் வெப்பநிலையினை நேரடியாக அளக்க தற்போது உதவும் வெப்பநிலைமானி எது?
    டிஜிட்டல் வெப்பநிலைமானி
27. செல்சியஸ் அளவீட்டு முறை யாருடையப் பெயரால் வழங்கப்படுகிறது?
    ஆண்ட்ரஸ் செல்சியஸ்
28. நீரின் உறைநிலை என்ன?
    $0^0$ C
29. நீரின் கொதிநிலை என்ன?
    $100^0$ C
30. பாரன்ஹீட் அளவீட்டு முறை யாருடைய பெயரால் வழங்கப்படுகிறது?
    டேனியல் கேப்ரியல் பாரன்ஹீட்
31. பாரன்ஹீட் அளவீட்டு முறையில் நீரின் உறைநிலை என்ன?
    32°F
32. பாரன்ஹீட் அளவீட்டு முறையில் நீரின் கொதிநிலை என்ன?
    212°F
33. பாரன்ஹீட் வெப்பநிலைமானியின் அளவுகோலானது எந்த அளவு முதல் எந்த அளவு வரை அளவிட உதவுகிறது?
    32°F to 212°F
34. கெல்வின் அளவீட்டு முறை யாருடைய பெயரால் வழங்கப்படுகிறது?
    வில்லியம் லார்டு கெல்வின்

35. ஒரு நாளின் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலையினை அளக்கப் பயன்படும் வெப்பநிலைமானி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    பெரும சிறும வெப்பநிலைமானி
36. எந்த வெப்பநிலைமானி தனிச்சுழி வெப்பநிலைமானி என அழைக்கப்படுகிறது?
    கெல்வின் வெப்பநிலைமானி
37. பாரன்ஹீட் அளவீட்டிற்கும் செல்சியஸ் அளவீட்டிற்கும் உள்ள தொடர்பு யாது?

$$\frac{(F-32)}{9} = \frac{C}{5}$$

38. கெல்வின் அளவீட்டிற்கும் செல்சியஸ் அளவீட்டிற்கும் உள்ள தொடர்பு யாது?
    $K = 273.15 + C$
39. பெருவெடிப்பு நிகழ்ந்த போது பிரபஞ்சத்தின் வெப்பநிலை என்னவாக இருந்தது?
    $10^{32}$ கெல்வின்
40. கெல்வின் அளவீட்டில் நீரின் கொதிநிலை என்ன?
    373.15 கெல்வின்
41. புவியில் பதிவு செய்யப்பட்ட மிக உயர் இயற்கை வெப்பநிலை என்ன?
    329.85 கெல்வின் ($56.7^0$c, $134.06^0$F)
42. கெல்வின் அளவீட்டு முறையில் மனித உடலின் சராசரி வெப்பநிலை என்ன?
    273.15 கெல்வின் (37 $^0$C, 98.6 $^0$F)
43. கெல்வின் அளவீட்டு முறையில் நீரின் உறைநிலை என்ன?
    273.15 கெல்வின் (0 $^0$C, 32 $^0$F)
44. புவியில் பதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த இயற்கை வெப்பநிலை என்ன?
    178.45 கெல்வின் ($-94.7^0$C, $-138.46^0$F)
45. பிரபஞ்சத்தின் மிகக்குறைந்த வெப்பநிலை நிலவும் பகுதி எது?
    பூமராங் நெபுலா
46. கெல்வின் அளவீட்டில் தனிச்சுழி வெப்பநிலை யாது?
    0 கெல்வின் ($-273.15^0$C, $-459.67^0$F)
47. ரான்கீன் அளவீட்டு முறையைக் அறிமுகப்படுத்தியவர் யார்?
    ரான்கீன் (1859)
48. பாரன்ஹீட் அளவீட்டு முறைக்கும் ரான்கீன் அளவீட்டு முறைக்கும் உள்ள தொடர்பு என்ன?
    $R = F + 459.67$
49. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் எந்த அளவீட்டு முறையைப் பயன்படுத்துகிறார்கள்?
    பாரன்ஹீட் அளவீட்டு முறை
50. எந்த வெப்பநிலையில் செல்சியஸ் மற்றும் பாரன்ஹீட் அளவீடுகள் ஒரே மதிப்பினை கொண்டிருக்கும்?
    - 40

## மின்னோட்டவியல்

51. இந்தியாவில் மின்சாரம் பயன்பாட்டிற்கு வந்த ஆண்ட எது?
    1899
52. இந்தியாவின் முதல் அனல் மின்நிலையம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
    1899 ஏப்ரல் 17
53. சென்னையில் எந்த ஆண்டு அனல் மின் நிலையம் உருவாக்கப்பட்டது?
    1900

54. ஒரு அணுவின் மையப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    உட்கரு
55. அணுவின் உட்கரு எந்தெந்த துகள்களை உள்ளடக்கியது?
    புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்கள்
56. புரோட்டான்கள் எந்த மின்சுமை கொண்டவை?
    நேர் மின்சுமை
57. நியூட்ரான்கள் எந்த மின்சுமை கொண்டவை?
    மின்சுமையற்றவை
58. எலெக்ட்ரான்கள் எந்த மின்சுமை கொண்டவை?
    எதிர் மின்சுமை
59. அணுவின் உட்கருவைச் சுற்றியுள்ள வட்டப்பாதையில் சுற்றிவரும் துகளின் பெயர் என்ன?
    எலெக்டரான்கள்
60. மின்னூட்டம் எந்த அலகினால் அளவிடப்படுகிறது?
    கூலூம்
61. ஒரு கூலூம் என்பது எத்தனை எலெக்ட்ரான் அல்லது புரோட்டான்களுக்கு சமம்?
    $6.242 \times 10^{18}$
62. மின்னூட்டம் எந்த ஆங்கில எழுத்தால் குறிக்கப்படுகிறது?
    q
63. மின்னூட்டங்களின் ஓட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    மின்னோட்டம்
64. மின்னோட்டம் எந்த ஆங்கில எழுத்தால் குறிக்கப்படுகிறது?
    I
65. மின்னோட்டத்தின் SI அலகு யாது?
    ஆம்பியர்
66. ஒரு கடத்தியின் ஏதேனும் ஓர் குறுக்கு வெட்டுப் பரப்பில் ஒரு வினாடி நேரத்தில் ஒரு கூலூம் மின்னூட்டம் பாய்ந்தால் அக்கடத்தியில் பாயும் மின்னோட்டம் -------- எனப்படும்?
    ஒரு ஆம்பியர்
67. மின்னோட்டம் காண உதவும் வாய்ப்பாடு யாது?

$$I = \frac{q}{T}$$

68. நேர் மின்னூட்டங்களின் இயக்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    மரபு மின்னோட்டம்
69. மின்கலத்தில் எலெக்ட்ரான்களின் ஓட்டம் எந்த முனையில் இருந்து எந்த முனைக்கு நடைபெறுகிறது?
    எதிர் முனையில் இருந்து நேர் முனைக்கு
70. மரபு மின்னோட்டம் எலெக்டரான்களின் ஓட்டத்திற்கு எத்திசையில் அமையும்?
    எதிர் திசையில்
71. மின்னோட்டம் எந்த கருவியால் அளவிடப்படுகிறது?
    அம்மீட்டர்
72. ஒரு மின் சுற்றில் அம்மீட்டர் எந்த இணைப்பில் இணைக்கப்பட வேண்டும்?
    தொடர் இணைப்பில்
73. 1 மில்லி ஆம்பியர் (mA) என்பது எத்தனை ஆம்பியர்?
    $10^{-3}$ அல்லது 1/1000 ஆம்பியர்

74. 1 மைக்ரோ ஆம்பியர் (μA) என்பது எத்தனை ஆம்பியர்?
    $10^{-6}$ அல்லது 1/1000000 ஆம்பியர்
75. ஒரு கடத்தியின் வழியே மின்னோட்டம் பாய வேண்டுமானால் எது வேறுபாடாக இருக்க வேண்டும்?
    மின்னழுத்தம்
76. மின்னழுத்த வேறுபாடு எந்த ஆங்கில எழுத்தால் குறிக்கப்படுகிறது?
    V
77.

இந்த குறியீட்டின் பொருள் என்ன?
    உயர் மின்னழுத்தம்
78. மின்னழுத்த வேறுபாட்டின் SI அலகு யாது?
    வோல்ட்
79. மின்னழுத்த வேறுபாட்டை அளவிட உதவும் கருவி எது?
    வோல்ட் மீட்டர்
80. ஒரு மின்சுற்றில் பாயும் மின்னூட்டத்தின் இயக்கத்தை எதிர்க்கும் அல்லது தடுக்கும் மின் உறுப்பின் பெயர் என்ன?
    மின்தடை
81. மின்தடையின் ஆங்கில குறியீடு யாது?
    R
82. மின்தடையின் SI அலகு யாது?
    ஓம்
83. ஒரு மின்கடத்தி மின்னோட்டத்தைக் கடத்தும் திறன் எவ்வாறு அழைக்கப்படும்?
    தன் மின் கடத்தத்திறன்
84. மின்கடத்துத்திறன் எந்த குறியீட்டால் குறிக்கப்படுகிறது?
    சிக்மா σ
85. மின்கடத்துத்திறனின் அலகு யாது?
    சீமென்ஸ் / மீட்டர் (s/m)
86. மின்தடை எண்ணின் குறியீடு எது?
    ரோ (ρ)
87. மின்தடை எண்ணின் SI அலகு யாது?
    ஓம்.மீட்டர் (Ωm)
88. மிகச் சிறிய அளவிலான மின்னோட்டத்தை மிகக் குறைந்த காலத்திற்கு உருவாக்கும் மூலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
    மின்கலன்கள் (மின் வேதிகலன்கள்)
89. மின்கலன்கள் வேதிஆற்றலை எந்த ஆற்றலாக மாற்றுகின்றன?
    மின்னாற்றல்
90. கீழ்கண்ட குறியீடு எதைக் குறிக்கிறது?


(மின்கலன்)
91. டார்ச் விளக்கில் பயன்படும் மின்கலன் எது?
    உலர் மின்கலன் (முதன்மை மின்கலன்)
92. எந்த மின்கலனை மீண்டும் மின்னேற்றம் செய்ய முடியாது?
    முதன்மை மின்கலன்

93. மோட்டார் வாகனங்களில் பயன்படும் மின்கலன் எது?
    துணை மின்கலன்
94. மின்னியற்றிகளில் பயன்படும் மின்கலன் எது?
    துணை மின்கலன்
95. எந்த மின்கலனை மீண்டும் மனினேற்றம் செய்ய முடியும்?
    துணை மின்கலன்
96. துணை மின்கலனில் நடைபெறும் வேதிவினை எவ்வகை வினையாகும்?
    மீள் வினை
97. லித்தியம் உருளை மின்கலன் எவ்வகை மின்கலன் ஆகும்?
    துணை மின்கலன்
98. கார அமில மின்கலன் எத்தகைய மின்கலன்
    துணை மின்கலன்
99. முதன்மை மின்கலன் உதாரணம்?
    வோல்டா மின்கலன், டேனியல் மின்கலன், லேக்லாஞ்சி மின்கலன், உலர் மின்கலன்
100. துணை மின்கலன் உதாரணம்?
    காரிய அமில சேமக்கலன், எடிசன் சேமக்கலன், நிக்கல் இரும்பு சேமக்கலன்
101. அவசர விளக்குகளில் பயன்படும் மின்கலன்கள் எவ்வகையைச் சார்ந்தது?
    துணைமின்கலன்
102. உலர் மின்கலன் யாரால் உருவாக்கப்பட்டது?
    யேய் சுகியோ (ஜப்பான் - 1887)
103. டார்ச் விளக்கு மற்றும் புகைப்படக்கருவியில் பயன்படும் மின்கலன் எது?
    உலர் மின்கலன் (முதன்மை மின்கலன்)
104. உலர் மின்கலன்கள் எந்த மின்கலத்தின் எளிய வடிவம் ஆகும்?
    லெக்லாஞ்சி மின்கலன்
105. உலர் மின்கலனில் எதிர் மின்வாய் ஆக செய்லபடுவது எது?
    துத்தநாக மின் தகடு
106. உலர் மின்கலனில் மின்பகுளியாக செயல்படும் வேதிப்பொருள் எது?
    அம்மோனியம் குளோரைடு
107. ஒரு கரைசலில் அயனியாக மாறும் தன்மை கொண்ட பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    மின்பகுளி
108. உலர் மின்கலனில் நேர் மின்வாய் ஆக செயல்படுவது எது?
    கார்பன் தண்டு
109. ஒன்றிற்கு மேற்பட்ட மின்கலன்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    மின்கல அடுக்கு
110. நவீன மின்கலன் கண்டுபிடிப்பிற்கு பெரிதும் காரணமானவர் யார்?
    அலெக்ஸாண்ட்ரோ வோல்டா
111. ஓர் மின்சுற்றில் மின்னோட்டத்தை பாயச் செய்யவும் நிறுத்தவும் பயன்படும் அமைப்பின் பெயர் என்ன?
    மின்சாவி
112. மின்கலன் குறியீட்டில் உள்ள நீளமான கோடு எதைக் குறிக்கிறது?
    நேர்மின் முனை

113.

 இது எந்த வகை மின்சுற்று?

தொடர் இணைப்பு

114.

 இது எவ்வகை மின்சுற்று?

பக்க இணைப்புச் சுற்று

115. இரு மின்னோட்டம் செல்லும் கடத்திகளுக்கு இடையே ஏற்படும் மிகக் குறைந்த மின்தடையினால் ஏற்படும் மின்சுற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?
குறுக்கு மின்சுற்று

116. குறுக்கு மின்சுற்று பயன் யாது?
வெல்டிங் செய்தல்

117. நற்கடத்திகள் எவ்வகை எலெக்டரான்களை அதிகம் கொண்டு இருக்கும்?
கட்டுறா எலெக்டரான்கள்

118. கட்டுறா எலெக்டரான்களைக் கொண்டிராத பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அரிதிற் கடத்திகள் (காப்பான்கள்)

119. தளர்வாக பிணைக்கப்பட்ட எலெக்டரான்களை கொண்ட அணுக்களால் ஆன பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
கடத்திகள்

120. நற்கடத்தி எவ்வகை மின்கடத்துதிறன் கொண்டதாக இருக்கும்?
அதிக மின் கடத்துத்திறன்

